



# தமிழ்ச் சிட்டு

ஆசிரியர்

பெருஞ்சித்திரனார்



குரல் : 11; இசை 4. விலை: 35 காசு

# சுவிசுலாந்து !

சுவிசுலாந்து-தென் ஆப்பிரிக்காவிலுள்ள ஒரு சிறிய நாடாகும். இங்கு நான்கு இலக்கம் மக்கள் வாழ்கின்றனர். இம்மக்கள் 'பாண்டு' இனத்தைச் சேர்ந்தவர்கள். இந்நாட்டில் பல ஆறுகளும், பைன் மரக்காடுகளும் உள்ளன. முகாமை உணவுப் பொருள்கள் கோதுமை, சோளம், கரும்பு, செந்தாழை (அன்னாசி) முதலியவையாம்.

சுவிசுலாந்தில் உடலுக்கேற்ற தட்ப வெப்ப நிலை நிலவுகிறது. இங்கு அழகான, மனத்துக்கு அமைதியைத் தரும் இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழலாம். இந்நாட்டில் அரசனை 'சிங்கம்' என்றும் அரசியை 'யானை' என்றும் மக்கள் அழைப்பதிலிருந்து அரசனுக்கும் அரசிக்குமுள்ள வலிமை, உரிமை நமக்கு விளங்குகிறது. அரசியின் தாய்க்கும் அரசாட்சி ஆள்வதற்கு உரிமை உண்டு.

சுவிசுலாந்து நாட்டிற்கு மூன்று தலைநகரங்கள் உள்ளன. அவை — உலும்பூம்பூ, மான்சினி, மாபேபேன் ஆகியவை. உலும்பூம்பூவில் பல மதங்களின் தலைமையகங்கள் உள்ளன. மான்சினியில் தொழில்கள் அதிகமாக நடைபெறுகின்றன. பெரிய விமான நிலையம் ஒன்று மான்சினியிலுள்ளது. மான்சினி கல்நார்களுக்குப் புகழ்பெற்ற இடமாகும். மாபேபேன், சுவிசுலாந்தின் ஆளுமைத் தலை நகரமாகும். சுலு (Zulu) மொழியில் முதல் செய்தித்தாள் மாபேபேனிலிருந்துதான் வெளியிடப் பெற்றது.

சுவிசுலாந்துப் பெண்கள் தங்கள் உடம்பில் இலைகளைச் சுற்றிக் கொண்டுள்ளனர். சுவிசுலாந்து ஆண்கள் இடையில் மட்டும் ஆடைகளை அணிந்துள்ளனர் அரசன் புலியின் தோலை உடல் முழுவதும் ஆடையாக அணிந்துள்ளான். சுவிசுலாந்துப் பெண்கள் தங்கள் முடியைத் தனிப்பட்ட ஒப்பற்ற முறையில் முடிந்துள்ளனர். அவர்கள் தங்கள் முடிகளுக்கு ஒட்டக்கூடிய பிசுபிசுப்பான ஒரு நெய்மத்தைத் தடவி ஒரு குவிந்த கூரை போன்ற பின்னலைப் போட்டுக் கொள்ளுகின்றனர்.

சுவிசுலாந்து மக்களில் பெரும்பான்மையானோர் கல்வி அறிவு பெறாதவர்கள். மக்கள் இன்றும் மூட நம்பிக்கைகளைக் கொண்டுள்ளனர். கல்வி நிலையங்கள் மதங்களின் மூலம் இப்பொழுதுதான் தோன்றியுள்ளன. ஆறுகளின் குறுக்கே அணைகள் கட்டப்பட்டு வருகின்றன. வெளிநாடுகளின் உதவியுடன் ஆற்றல் மிகுந்த மின் நிலையங்கள் தோன்றி வருகின்றன. சுவிசுலாந்து மெல்ல மெல்ல முன்னேற்றமடைந்து வருகிறது. o

## அதிகமாகிவரும் மக்கள் தொகை !

இந்திய நாட்டில் நான்கு பெரிய நகரங்கள் காணப்படுகின்றன. 1971-இல் சென்னையில் 32 இலக்கம் மக்கள் இருந்தனர். 1980-இல் 45 இலக்கத்தை அடைந்துவிடும்.

1961-இல் பம்பாயில் 40 இலக்கத்தை விட அதிகமாயிருந்தது. இப்பொழுது 65 இலக்கம் மக்கள் உள்ளனர். 1980இல் 70 இலக்கத்தை அடைந்துவிடும்.

கல்கத்தாவில் இன்று 90 இலக்கம் மக்கள் உள்ளனர். 1980-இல் ஒரு கோடியை அடைந்துவிடும்.

தில்லியின் மக்கள் தொகை அறுபது இலக்கம்

—மு. தொல்காப்பியன்

அட்டைப் படப் பாடல்!



# மருளாதே தம்பி மருளாதே!

மருளாதே தம்பி
{மருளாதே!
மயக்கம் கொண்டே
மருளாதே!

இருளைக் கண்டோ
இழிவைக் கண்டோ
எதனைக் கண்டும்
மருளாதே!
பொருளைக் கண்டோ
பொய்யைக் கண்டோ
போலியைக் கண்டோ
வெருளாதே;

இழப்ைப நினைத்தோ
இகழ்வை நினைத்தோ
எழிலை நினைத்தோ மயங்காதே!
உழைப்பை நினைத்தோ
உருவை நினைத்தோ
ஓய்வை நினைத்தோ தயங்காதே!

புகழைப் பார்த்தோ
புன்மையைப் பார்த்தோ
புரட்டரைப் பார்த்தோ கெஞ்சாதே!
இகழைப் பார்த்தோ
எதிர்ப்பைப் பார்த்தோ
இன்னலைப் பார்த்தோ அஞ்சாதே!

மருளாதே தம்பி மருளாதே!
மயக்கம் கொண்டே மருளாதே?

---

## அட்டைப்படத் தம்பி

அட்டைப்படத் தம்பியின் பெயர்: கொன்றை வேந்தன்
அகவை: ஓராண்டு
தாய் பெயர்: சி. சாந்தா
தந்தை பெயர்: செ. சித்தார்த்தன்
முகவரி: கருணாநிதி நகர், சென்னை-78.



# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

**இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!**
**இன்றைய சிறுவர் நாளைய உலகம்!**
**நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!**
**என்றும் அழியாது இருப்பது புகழே!**

குரல் 11 ] திபி. 2010. கடகம் (சூலை- ஆக. 1979 [ இசை 4

## போர்க் களமும் பொது நலமும்!

போர் நடக்கிறது. படைக்கு ஆள் எடுக்கின்றனர். நம்மில் எல்லாருமே படைத்துறையில் சேர்வதில்லை. வீரர்களே படையில் சேருகின்றனர். இனி, படையில் சேரும் எல்லாருமே போரில் கலந்து கொள்வதில்லை; போர்முனைக்குச் சென்று போராடுவதில்லை. படையில் சேர்ந்த வீரர்களில் சிலர் போருக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்வதில் ஈடுபடுகின்றனர். படை வண்டிகள் செல்ல சாலைகள் அமைக்கின்றனர். ஆறுகளின் குறுக்கே பாலங்களைக் கட்டுகின்றனர்; சிலர் எல்லைகளைக் காவல் புரிகின்றனர்; சிலர் படைஞர்களுக்காக உணவுப் பொருள்களைக் கொண்டு செல்வதிலும், அவற்றைச் சமைப்பதிலும், படைப்பதிலும் ஈடுபடுகின்றனர். இன்னுஞ் சிலர் வேவு பார்க்கின்றனர்; படைத்துறைச் செய்திகளை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு செல்கின்றனர். சிலர் படையில் உள்ள நோயாளிகளையும், போர்முனைக்குச் சென்று காயம்

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: **பெருஞ்சித்திரனார்.**
**தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005 (தமிழகம்)**

பட்டவர்கள், கை கால் இழந்தவர்கள் முதலியவர்களையும் பண்டித் துறை மருத்துவமனையில் வைத்துப் பண்டுவம் செய்கின்றனர். சிலர் படைக்கருவிகள் கொண்டு செல்லும் வண்டிகளை ஓட்டுகின்றனர். கப்பலில் மீகாமன்களாகவும், வானூர்திகளில் வலவர்களாகவும் சிலர் இயங்குகின்றனர். இன்னும் பலர் பலவாறான வேறு பணிகளில் ஈடுபடுகின்றனர். அவர்களுள் மிகச் சிலரே போர்முனைக்குச் செல்கின்றனர். போரில் கலந்து கொண்டு வீரச் செயல்கள் செய்கின்றனர். சிலரே போரில் அடிபட்டு உடல் உறுப்புகளை இழக்கவும்; உயிர் விடவும் செயகின்றனர். எனவே போர்ப்படையில் உள்ளவர்கள் அனைவருமே போர்முனைக்குச் செல்வதில்லை; போர் செய்வதில்லை. அவர்களுள் மிகமிகச் சிலரே, மிக்க வீரவுணர்வு உடையவர்களே எல்லாருக்கும் முந்திக்கொண்டு போர் நடக்கும் களத்திற்கு சென்று போர் செய்து வெற்றி பெறுகிறார்கள்; அல்லது உயிர் இழக்கிறார்கள். இவர்கள் வன்கண்ணர்கள். வன்கண்மை மிகுவீரம்.

இனி, போர்ப்படையில் சேர்வது போன்றுதான் மக்களுக்குத் தொண்டு செய்வதும்; பொதுநலம் கருதுவதும். மக்களுக்குத் தொண்டு செய்யப் புறப்பட்டவர்கள், பலவகையான தொல்லைகளை ஏற்றுக்கொள்ளும் உறுதியான உள்ளமும், தளராத உணர்வும், மேலும் மேலும் முனைந்து செய்கின்ற விடா முயற்சியும், பழிகளும் ஏசல் பூசல்களும் வந்தவிடத்து மனம் சோர்ந்து போகாமையும், வெயில், மழை, பனி என்றும் இரவு பகலென்றும், காடுமேடு என்றும் பாராத உழைப்பும் உடையவர்களாக இருத்தல் வேண்டும். இவர்கள் குடிசெய்பவர்கள். உண்மையான பொதுத் தொண்டு செய்வதும்—அஃதாவது குடிசெய்வதும், போர்க்களத்தில் ஈடுபடுவது போலும் மிகவும் கடினமான செயலே. இக்கடினமான செயல்களையும் போர் வீரர்களில் மிகுந்த வீர ஆற்றல் உடையவர்களே முன்சென்று தாங்கிக்கொண்டு, போரில் ஈடுபடுகின்றனர். அதேபோல் மக்கள் தொண்டு செய்ய விரும்பும் பொதுத் தொண்டர்களும், தங்களுக்குத் தாங்களாகவே துன்பங்களையும் துயரங்களையும் பொறுத்துக் கொண்டும், சுமை பாராமலும் பொது நலன்களில் ஈடுபடுகின்றனர்

போர்க்களத்துக்குப் போகின்றவர்கள் எல்லாருமே போரில் ஈடுபடுவதில்லை; அடிபட்டுச் சாவதில்லை. நல்ல வீர முனைப்புள்ள, உயிருக்கு அஞ்சாத வன்கண்மை உடைய சிலர்தான் அவ்வாறு நேருக்கு நேர் போர் செய்து குத்தப்பட்டும், வெட்டப்பட்டும், குண்டடி

பட்டும் விரச் சாவு சாகின்றனர். இதுபோலவே, பொதுமக்களில் பலரும் எதைப்பற்றியும் யாரைப்பற்றியும் கவலைப்படாமல் இருக்க, அவர்களுக்காக உழைக்க—பொதுத் தொண்டு செய்ய முன்வருவர் சிலரே. அவ்வாறு உழைக்க வருகிற சிலரிலும் கொடிகள் தூக்குவதற்கும், கூப்பாடு போடுவதற்கும், ஊர்வலம் போவதற்கும் மட்டுமே சிலர் பயன்படுவர். அவர்களுக்குரிய வேலைகளைச் செய்த பின் அவர்களுக்கு மற்றவற்றைப் பற்றிக் கவலையிருக்காது. ஆனால், அதில் உண்மையாகவே ஈடுபடுகின்ற முனைப்பான தொண்டர்களுக்கும், முன்னோடிகளான தலைவர்களுக்கும் பலவற்றைப் பற்றிய கவலைகளும் இருக்கும்; சுமைகளும் இருக்கும். தொண்டர்கள் சாப்பிட்டார்களா, தூங்கினார்களா, ஒருவருக்கொருவர் முரண்பாடில்லாமல் நடந்து கொண்டார்களா, தாங்கள் மேற்கொண்ட கொள்கை வெற்றி பெற இன்னும் எந்தெந்த அளவில் போராட வேண்டும்; முனைய வேண்டும்; இன்னும் எவ்வளவில் எதிர்ப்புகளைத் தாங்கிக்கொள்ள வேண்டும்; இவற்றுக்கெல்லாம் பொருள் வாய்ப்புகள் எந்த அளவில் உள்ளன; பொருளில்லா விடத்து என்ன செய்யலாம்; எதை விற்கலாம்; எவரிடம் கேட்கலாம்' என்பன பற்றிய கவலை யெல்லாம் சுமைகளாக அவர்கள் மனங்களில் பற்றியிருக்கும். போரில் ஈடுபடுகின்ற விரர்களுக்கும் இப்படிப்பட்ட கவலைகள் உண்டு. எதிரி எப்பக்கமிருந்து தாக்குவான்; எப்பொழுது ஓய்வெடுப்பான்; தன்னைச் சேர்ந்த படை விரர்கள் எங்கெங்கு இருக்கிறார்கள், என்கின்ற கவலையுடன், தான் இல்லாவிட்டால் தன் மனைவி என்னாவாள், எப்படித் தாய் கவலையுறுவாள்; மக்கள் என்னென்ன தொல்லைப்படுவார்கள் என்ற கவலைகளும் போர்விரனுக்கு உண்டு.

ஒருவகையில் போரில் ஈடுபடுவதும், பொதுத் தொண்டில் முனைப்பாக ஈடுபடுவதும் அஃதாவது குடிசெய்வதும் ஒன்றே என்பார் திருவள்ளுவர். போர்வீரனுக்கும் உயிரிழப்புக்கு அஞ்சாத வன்கண்மை (மிகுந்த விரம்) வேண்டும். நாட்டின் பெரிய நலன்களை எண்ணி எதிரிக்குத் தன் நாட்டை அடிமைப்படுத்த விடாமல் காத்து நிற்கும் பொறுப்பு அவனுக்கு இருக்கிறது. எனவே வருகின்ற துன்பச் சுமைகளையும் துயர அழுத்தங்களையும் தாங்கிக் கொள்கின்ற வன்மை (உடல், உள்ளத் திறன்கள்) வேண்டும். உண்மையாக மக்கள் தொண்டு செய்யும் - குடிசெய்யும் ஒரு தொண்டனுக்கும்—தலைவனுக்கும்—அதேபோல் மக்கள் நலனைக் காத்து நிற்பதில் உள்ள சுமைகளை யெல்லாம் தாங்கிக்கொள்ளும் பொறுப்பு வேண்டும். அதற்கென உள்ள எல்லாச் சுமைகளும் அவனுடைய தோள்களைத்தான் வந்து அழுத்தும் என்பது வள்ளுவர் கருத்து. எவ்வளவு உண்மையான கூற்று இது. குடிசெயல் வகையில் ஏழாவது குறள் இது :

அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை.

# மிகவும் முதியவர்கள் !

சோவியத்து நாட்டில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களில் மிகவும் அகவையில் மூத்தவர் மெசித் அகயேவ். இவருக்கு இப்போது 142 அகவையாகிறது. இவர் அசெர்பய்சானைச் சேர்ந்த லெரிக் என்ற மலைநாட்டுச் சிற்றூரில் வாழ்ந்து வருகிறார்.

உண்மையில் இந்த மலைநாட்டில் வாழ்ந்து வருபவர்கள் பலரும் நூறாண்டையும் தாண்டிப் பல ஆண்டுகள் வாழ்கின்றனர். மெசித் அகயேவ் வாழ்ந்து வரும் அதே லிரிக் சிற்றூரைச் சேர்ந்தவர்களில் மக்முது எய்வாசோவ் என்பவர் 156 ஆண்டுகள் வரையிலும், இச்சிற்றூருக்கு அருகிலுள்ள பர்சாவு என்ற மற்றொரு மலைநாட்டு ஊரைச் சேர்ந்த சிராலி மிச்லிமோவ் 167 ஆண்டுகள் வரையிலும் வாழ்ந்து அண்மையிலேயே காலமாயினர்.

இன்று சோவியத்து நாட்டில் மிகவும் அகவையில்மூ த்தவராக விளங்கும் மெசித் அகயேவ் எப்படி இருக்கிறார்? அவர் ஒல்லியாக வும் உயரமாகவும் இருக்கிறார். முகத்தில் உயிர்க்களை ததும்புகிறது. அதன் நிறமும் மங்கி விடவில்லை. முகத்தில் விழுந்துள்ள சுருக்கங் கள்தாம் அவரது அகவையைக் காட்டிக் கொடுக்கின்றன. மற்றப்படி அவர் ஓர் இளைஞரைப் போல் சுறுசுறுப்பாகவே செயல்பட்டு வருகிறார்; நன்றாக நடமாடுகிறார். அவரது கண் பார்வையும் செவிப் புலனும் கொஞ்சம்கூட மங்கிவிடவில்லை. அவரை முறை யாகச் சென்று பார்த்து வரும் உள்ளூர் மருத்துவமனையின் தலைமை மருத்துவர் மிர்சாசான் சபரோவ், அவரது உடல் நலம் பொறாமைப் படத் தக்க முறையில் மிகவும் வியப்பாக உள்ளதாகவும் அவரது நாடித் துடிப்பு நிமையத்துக்கு 62 ஆகவும் குருதி அழுத்தம் 140/70 ஆகவும் உள்ளதாகக் கூறுகிறார்.

சரி, அவர் எப்படி இத்தனைக் காலமாக உயிர் வாழ முடிகிறது? மிகநலமான நீண்ட வாழ்க்கைக்கும் வாழ்கின்ற முறைக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதாக அகயேவ் கூறுகிறார். அவர் மது அருந்தியதே இல்லை. அவரது உணவு இறைச்சியும் பால்பண்ணைப் பொருள்களும் காய்கறிகளும்தாம். எல்லாவற்றுக்கும் மேலாக அவர் வாழ்நாள் முழுவதும் எப்போதும் நன்கு உழைத்தும் வந்திருக்கிறார். அவர் தந்தையும் தாத்தாவும் மேய்ப்பர்களாக இருந்தவர்கள். ஆனால் அசயேவ் இந்தத் தொழிலை மூன்றாண்டுகளுக்கு முன்னர்தான் கை விட்டார். மேய்ப்பராக இருந்தால் வெகுதூரம் அலைய வேண்டி யிருக்கிறது என்பதற்காகவே அதனை விட்டு விட்டார். என்றாலும்

இப்போதும் அவர் சோம்பியிருக்கவில்லை. மாறாக, ஒரு கூட்டுப் பண்ணையில் பணியாற்றி வருகிறார். எனினும் இன்றும்கூட அவர் நடமாடும் தொலைவு நாளொன்றுக்கு பத்து பன்னிரண்டு அயிர மாத்திரி (7½ கல்) தொலைவுக்குக் குறையவில்லை.

இதே மலைநாட்டில் நூறு அகவையைத் தாண்டிய பெண்களும் உண்டு. எடுத்துக்காட்டாக அசயேவ் வாழும் அதே ஊரைச் சேர்ந்த கியல்பாசி. சனுன் குசினோவ் என்னும் அக்காள் தங்கை இருவருக்கும் அக்வை முறையே 112-உம், 102-உம் ஆகும். இவர்களும் இன்றும் பின்னல் வேலை, தோட்ட வேலை முதலியவற்றைச் செய்து வருகின்றனர். குபா நகரைச் சேர்ந்த சிபிதா சியத்யோவா என்னும் 112 அகவையான மூதாட்டி இன்றும் சமக்காள நெசவில் பல மணி நேரம் செலவிடுகிறார் ; மற்றவர்களுக்கும் இந்த நெசவுக் கலையைக் கற்றுக் கொடுத்து வருகிறார்.

142 அகவையான அசயேவ் இவ்வாறு கூறுகிறார் : " நான் என் வாழ்நாளில் ஒருபோதும் மருத்துவரின் உதவியை நாடிச் சென்றதில்லை. நூறு அகவை ஆவதற்கு முன்னுள் மருத்துவமனைக்கு ஓடிப் போவது என்பது உண்மையான மாந்தனுக்கு வெட்கமான செயலாகும் என்றே நான் கருதுகிறேன். தூய்மையான மலைக்காற்று, சுனை நீர், சூரியன் இவைதாம் தலைசிறந்த மருந்து என்பது என் கருத்தாகும். மக்கள் மாத்திரைகளையும் மற்றும் மருந்துப் பொடிகளையும் அதிகமாக விழுங்கி வைப்பதால்தான் இப்போது அவர்கள் அடிக்கடி நோய்வாய்ப்படுகிறார்கள் ! "

இவரின் " இளம் " மனைவியான கினுேசும் இவருடன் இருக்கிறார். இந்த மனைவிக்கு இப்போது அகவை 83, மெசித் அகயேவின் வழித்தோன்றல்கள் – அஃதாவது மக்கள், பேரன் பேத்திகள், கொள்ளுப் பேரன் பேத்திகள் ஆகியோர் மொத்த எண்ணிக்கை 151.

" என் கடைக்குட்டி மகளான கைசுபாசிக்கு பதினேரு பிள்ளைகள். என் முதல் மனைவியும் 11 மகன்களைப் பெற்றாள். முன்பெல்லாம் ஆண்கள்தாம் வயல்களில் வேலை பார்த்தனர் ; கன்றுகாலிகளைப் பார்த்துக் கொண்டனர், இன்றோ கூட்டுப் பண்ணைகளில் பெண்களும் உழைக்கின்றனர். அதுமட்டுமன்று, இப்போது இளம் பெண்டிர் ஆண்களோடு சேர்ந்து நகரத்திலுள்ள கல்லூரிகளில் சென்று படித்துப் பட்டம் பெற்று மருத்துவர்களாகவும், பொறியாளர்களாகவும், உழவியல் அறிஞர்களாகவும் திரும்பி வருகின்றனர். இதற்கு என் குலவழியினரே சான்றாகும் " என்கிறார் அசயேவ்.

# சில செய்திகள்

## கொடுங்கோலர்களின் அழிவு!

கொடுங்கோலர்களின் காலம் மலையேறி விட்டது!

சென்ற ஓராண்டுக் காலத்துக்குள் உலகில் அடுத்தடுத்து நிகழ்ந்த நிகழ்ச்சிகளைப் பார்த்தாலே இந்த உண்மை புரியும். எடுத்துக் காட்டாக, ஈரானில் கொடுங்கோலாட்சி புரிந்து வந்த சா மன்னனுக்கு எதிராக அந்நாட்டு மக்கள் திரண்டு எழுந்து போரிட்டதன் விளைவாக, அந்த மன்னன் தனது மயிலிருக்கையை விடுத்து அடைக்கலம் தேடி அயல்நாட்டுக்கு ஓடி விட்டான். அதேபோல் கம்போடியாவில் இலக்கக்கணக்கான கம்போடிய மக்களைக் கொன்று குவித்துக், கம்போடிய நாட்டையே பிணக்கிடங்காக மாற்றிய பால்பாட் என்ற கொடுங்கோலனும் இறுதியில் அந்த நாட்டின் நாட்டுப்பற்று மிகுந்த புரட்சிமிகு ஆற்றல்களால் விரட்டப்பட்டுக், காடுகளில் புகலிடம் தேட நேர்ந்தது. இப்போதோ நடு அமெரிக்காவைச் சேர்ந்த நிகரகுவா நாட்டில் கொடுங்கோலனுகவும் முழு அதிகாரியாகவும் ஆட்சி நடத்தி வந்த அனசுடாசியோ சோமோசாவும், அவனுக்கு ஆதரவாக நின்ற ஒரே ஆற்றலான தேசியக் காவல் படையினருக்கும், நாட்டுப்பற்று மிக்க சான்டினிசுடா தேச விடுதலை முன்னணியைச் சேர்ந்த (எசு. என். எல். எஃப்) வீரர்களுக்கும் இடையே மாதக் கணக்கில் நடந்த முரட்டுத்தனமான போராட்டத்துக்குப் பின்னுல், வேறு வழியின்றித் தன் நாட்டை விட்டு ஓடி அமெரிக்காவில் மியாமி என்ற இடத்தில் புகலிடம் தேடிக் கொண்டிருக்கிருன். இதன் மூலம் அந்நாட்டை நாற்பதாண்டுக் காலமாக ஆண்டு வந்த சோமோசா குடும்பத்தினரின் முழுத்தன்னதிகார ஆட்சி ஒரேயடியாகப் புதைக்கப் பட்டு விட்டது.

## உங்கள் நாயைக் கட்டுப்படுத்துங்கள்!

சென்ற ஆண்டில் பிரான்சு நாட்டில் 3,400 அஞ்சல்காரர்களை நாய்கள் கடித்து விட்டன என்ற தகவலை பிரெஞ்சு அஞ்சல் அதிகாரிகள் அண்மையில் வெளியிட்டனர். 1971-ஆம் ஆண்டை விட இது 60 விழுக்காடு அதிகமாம்! எனவே இவ்வாண்டு மே மாதம் முதல் அவர்கள் ஒரு கருத்துப் பரப்புதல் இயக்கத்தைத் தொடங்கினர். "உங்கள் நாயைக் கட்டுப்படுத்திஞல், அது கடிக்காது" என்பது அந்த இயக்கத்தின் முழக்கம். இந்த முழக்கத்தைத் தாங்கிய 70,000 அட்டைகள், அஞ்சல் நிலையங்களிலும், நகராட்சி மண்டபங்களிலும், காவல் நிலையங்களில் ஒட்டப்படும். நாய் வைத்திருப்போரிடம் 20 இலக்கம் துண்டு அறிக்கைகள் வழங்கப்படும். நாய்களைக் கட்டுப் படுத்த வேண்டிய அவர்களது கடமையை நினைவூட்டும் வெளியீடுகள் அவை. இவை தவிர, அஞ்சல்காரர்களிடம் 2 இலக்கம் வெளியீடுகள் வழங்கப்படும். நாய் கடித்தால் என்ன செய்ய வேண்டும் என்பதை விளக்கும் வெளியீடுகள் அவை.

## எழுத்தறிவின்மை எவ்வளவு?

அண்மையில் அமெரிக்காவில் நடைபெற்ற கணக்கெடுப்பின்படி, ஐந்து அமெரிக்கர்களில் ஒருவருக்கு, கடிதம் எழுதவோ, ஒரு கேள்வித் தாள் அல்லது காசோலையை நிறைவு செய்யவோ, உணவுப் பட்டியல் அட்டையைப் படிக்கவோ தெரியாது. 50 இலக்கம் அமெரிக்கக் குழந்தைகள் பள்ளிக் கூடங்களுக்குச் செல்லவில்லை. ஐந்து ஆண்டுகளுக்கு மேல் படிக்கவில்லை. அகவை வந்தவர்களில் 5.1 கோடிப் பேருக்கு உயர்நிலைப்பள்ளிக் கல்வி கிடையாது. அமெரிக்காவில் கல்லூரியில் ஓராண்டு படிக்க இப்பொழுது 5,200 தாலர் செலவாகிறது. வரும் ஐந்தாண்டுகளில் கல்விக் கட்டணம் 49 விழுக்காடு உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அரசவைப் புள்ளி விளக்கங்களின்படி, இத்தாலியில் எழுத்தறிவு அற்றவர்கள் மற்றும் அரை குறையாக எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் தொகை 1 கோடி 20 இலக்கம்; அஃதாவது இத்தாலியின் மொத்த மக்கள் தொகையில் கால் பங்கு!

## சிறுவர் திருடுவதன் காரணம் என்ன?

“உங்கள் குழந்தையும் திருடுகிறது என்று உங்களுக்குத் தெரியுமா? கடைகளில் திருடுவது என்பது, ஒரு குற்றவாளியின் வாழ்க்கையில் தொடக்கக் கட்டம் ஆகும்”. மேற்கு செர்மன் கடைகளில் இது போன்ற சுவரொட்டிகள் காணப் படுகின்றன.

அந்த நாட்டில் இளம் குற்றவாளிகளின் எண்ணிக்கை அதிகமாகி வருகிறது என்பதை இந்தச் சுவரொட்டிகள் காட்டுகின்றன. 1978-ஆம் ஆண்டு புள்ளி விளத்தப்படி, சட்டமீறல் குற்றங்களில் நான்கில் ஒரு பங்கு இளைஞர்களால் செய்யப்பட்டுள்ளன. அண்மை ஆண்டுகளில், அகவை வந்த குற்றவாளிகளை விட இளங் குற்றவாளிகளின் எண்ணிக்கை மூன்று மடங்கு பெருகியுள்ளது. இதனால் மேற்கு செர்மன் மக்கள் கவலை அடைந்துள்ளனர்.

திருட்டு நடவடிக்கைகளில் இளைஞர்கள் ஈடுபடக் காரணம் என்ன?

சென்ற ஆண்டில் பலமுறை திருட்டுக் குற்றம் புரிந்த ஒரு 12 அகவையுடைய பள்ளிச் சிறுவன் இவ்வாறு கூறினான்: “எங்களுக்கு வாழ்க்கையில் சலிப்பு ஏற்பட்டுள்ளது. நாங்கள் எல்லோரும் அந்தச் செயலில் ஈடுபட்டோம். பள்ளிக்கூடம் விட்ட பிறகு, நாங்கள் திருடினோம். தன்-தொண்டு என்று அதை அழைத்துக் கொண்டோம்.”

இந்த ஒப்புதல் உரை, அந்தச் சிறுவன், அவனின் பெற்றோர்கள், நமது கல்வி முறை, குமுகாய அமைப்பு ஆகியவற்றைப் பற்றி எவ்வளவோ உண்மைகளை எடுத்துக் கூறுகிறது என்று கொலோன் நகரத் துப்பறியும் துறைத்தலைவர் குறிப்பிட்டார்.

# யானையின் பாசம்!

—க. தமிழமல்லன் க.இ.

ஒரு பெரிய காடு! விலங்கினங்கள் பல அங்கே இன்பமாய்த் திரிந்து வாழ்ந்து வந்தன. அக்காட்டில் ஓர் யானை இணை மூன்று யானைக் குட்டிகளைப் பெற்றெடுத்தது! மழலை இன்பம் பொங்க அவை மகிழ்ச்சியைக் கொண்டாடின! அழகு தவழும் அவ்வேழக் குடும்பம் அன்புப் பெருக்கால் வாழ்ந்து வந்தது.

நாள்தோறும் பிடியுங்களிறும் காட்டின் பல பகுதிகளுக்கும் குட்டிகளை அழைத்துச் சென்று வருவது வழக்கம். களிறு முன் செல்லும், பின்னே வரிசையாக மூன்று குட்டிகள், இறுதியில் பெண் யானை வரும். அக்காட்சி காட்டுக்கே எழில் சேர்த்தது. நடை பழக்குவதிலும் நல்லுணவு தருவதிலும் தாயும் தந்தையும் இன்பம் கொண்டன. குட்டிகளுக்கோ மகிழ்ச்சிக்குக் குறைவில்லை!

அந்தக் காட்டின் இடையே நீண்ட ஓர் இருப்புப் பாதை சென்றது!

அன்று — களிறு உணவு தேடச் சென்று விட்டது! தன் மூன்று குட்டிகளையும் அழைத்துக் கொண்டு நடைபழக்கி நெடுந்தொலைவு வந்துவிட்டது பெண் யானை. அது தன் குட்டிகளை இருப்புப் பாதையைத் தாண்டி இட்டுச் செல்ல விழைந்தது.

குட்டிகள் இருப்புப் பாதையைத் தாண்டத் தாய் யானை உதவி செய்தது. இரண்டு குட்டிகளைத் தாண்டச் செய்துவிட்ட அந்த யானை மூன்றாவது குட்டிக்கும் உதவ வந்தது!

அக்குட்டியும் பாதையைத் தாண்டிப் பெரும்பாலும் வந்து கொண்டிருந்தது!

அதற்குள், மிக விரைவாக ஒரு தொடர்வண்டி வந்து விட்டது. அவ்வண்டி குட்டியின் பின்புறம் மோதித் தள்ளி விட்டுச் சென்றது! குட்டியோ 'தடால்' என்று அப்புறம் குப்புற விழுந்தது! யானைக்குட்டி விழுந்தால் எப்படியிருக்கும்? நல்லவேளை...உயிருக்கொன்றுமில்லை.

மற்ற யானைக் குட்டிகளும் பிடியும் காடே அதிரும்படிப் பிளிறின! பாசம் பொங்கப் பொங்க அன்பு பொழிந்து அணைத்து வளர்த்த யானைக் குட்டியைத் தொடர்வண்டி தீண்டி விட்டதே என்று அப் பெண் யானை பெரிதுங் கலங்கிற்று! ஆராத் துயர் கொண்டது!

அடுத்த நாள் — அதே வேளை!

காட்டிலிருந்த எல்லா யானைகளும் இருப்புப் பாதையருகே பிளிறிக் கொண்டு வந்து கூடின! பாதையை மறித்துச் சூழ்ந்து வரிசையாய் நின்று கொண்டன.

நேரம் நெருங்கியது! அதே தொடர் வண்டி!

எல்லா யானைகளும் மிக்க சீற்றத்துடன் பிளிறிக் கொண்டே பாதையை மறித்தன. சற்றுத் தொலைவிலே நின்றது தொடர்வண்டி! வழியேது?

ஓட்டுநர் திகைத்தார். நேற்றைய நிகழ்ச்சி நினைவிற்பட்டது. யானைக் கூட்டத்தைக் கலைக்கப் பலவகை ஒலிகளை எழுப்பிப் பார்த்தார் அவர்! பயணியர் அனைவரும் மிகவும் அஞ்சி நடுங்கினர். யானைகளால் என்ன நிகழுமோ?

யானைகளின் பாசத்தையும் ஒற்றுமையையும் பலர் பலவாருய்ப் பாராட்டிப் பேசிக் கொண்டனர்! பல கதைகள் அவர்களிடையே பரவின!

ஓட்டுநர் முயற்சி தொடர்ந்தது!

அவர் வண்டியை நெடுந்தொலைவு பின்னேக்குச் செலுத்தினுர்! வண்டியின் ஊதொலியுடன் யானைகளின் பிளிறில் போட்டியிட்டது!

சில மணி நேரங் கடந்தது. யானைக் குட்டியைத் தள்ளிய தொடர்வண்டியை எப்படியும் தள்ளி விட்டுப் பழிதீர்க்கக் காத்திருந்தது யானைக் கூட்டம்.

நேரம் கடந்து கொண்டிருந்தது,

யானைக் கூட்டமும் காத்திருந்தது!

திடுமென ஓர் ஒலி!

தொடர் வண்டியைப் பீறிட்டொலியுடன் மிகை வேகத்தில் செலுத்தினுர் ஓட்டுநர்! வண்டியின் மிகை வேகமும் பீறிட்டொலியும் யானைகளை மிரளச் செய்யவே அவை கலைந்து ஒதுங்கின!

இவ்வாருக யானைக் கூட்டத்தின் பழி வாங்கலிலிருந்து தொடர் வண்டி தப்பித்துச் சென்று கொண்டிருந்தது!

ஒவ்வொரு பெட்டியிலும் யானையின் பாசம் பேசப்பட்டது!

---

## குடியிருப்புத் தொல்லைகள்

மேலை நாடுகளில் குடியிருப்பு வாய்ப்பின்றிப் பலர் தொல்லைப் படுகின்றனர். அங்கே ஏராளமான வீடுகள் வெறுமையாகக் கிடந்த போதிலும், எண்ணற்ற குடும்பங்கள் மிக இழிவான குடியிருப்புகளில் நெரிசலாக வாழுகின்றனர்; ஏனெனில் புதிய குடியிருப்புகளின் வாடகை மிக அதிகமாக உள்ளது. பாரிசு நகரில் 2,75,000 குடியிருப்புகள் வெறுமையாக் உள்ளன; அதே சமயத்தில், 250,000 குடும்பங்க்ள் மிகக் கேடான குடியிருப்புகளில் வாழுகின்றனர். இலண்டனில் 100,000 வீடுகள் வெறுமையாகக் கிடக்கின்றன; அதே வேளையில், 30,000 மக்களுக்குக் குடியிருக்க வீடுகளே இல்லை. இன்று அமெரிக்கத் தொழிலாளர்கள் தங்கள் ஊதியங்களில் 30 முதல் 50 விழுக்காடு வரை வீட்டு வாடகை கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளனர். மேற்கு செர்மனியில் வீட்டு வாடகை மிக அதிகமாக இருப்பதால், வீடற்றோருக்கான நிலையங்களில் ஏறத்தாழ 5 இலக்கம் பேர் வாழுகின்கின்றனர்; படுமோசமான வீடுகளில் 15 இலக்கம் பேர் வாழ்கின்றனர். இத்தாலியில் உரோம் நகரில் 8 இலக்கம் பேர் மிக மட்டான வீடுகளில் தொல்லைப் படுகின்றனர்.

# அமெரிக்கத் திரைப்பட இழிவும், ‘குட்டி’ நடிகைகளைப் படுத்தும் கொடுமையும்!

கொலை! குத்து! வெட்டு! — அமெரிக்காவில் இவையெல்லாம் திரைப் படத்திலும் தொலைக் காட்சிகளிலும் பொதுவாக இடம்பெறும் காட்சிகளாகும். இவற்றை அங்குப் பெரியவர்கள் மட்டுமல்லாது பிள்ளைகளும் பார்க்கிறார்கள். பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் செலவிடும் நேரத்தைவிட அதிகமான நேரத்தைத் தொலைக்காட்சி அல்லது திரைப்படம் பார்ப்பதிலேயே செலவிடுகின்றனர் என்று அமெரிக்க நாட்டுப் புள்ளி விளக்கங்களே கூறுகின்றன.

பிள்ளைகள் தாங்கள் வலு மிக்கவர்களாகவும் சுறுசுறுப்பு மிக்கவர்களாகவும் விளங்க விரும்புவது இயல்பு. எனவே அவர்கள் விறுவிறுப்பு மிக்க சண்டைப் படங்களை விரும்பிப் பார்க்கின்றனர். ஆயினும் சண்டைப் படங்கள் என்ற பெயரால் நாளும் கொலை, குத்து, வெட்டு முதலிய மலிந்த படங்களையே பார்ப்பதால், இத்தகைய குற்றச் செயல்களைச் செய்யும் வினைகளும் அவர்களுக்கு அன்றாடம் காணும் மிகப் பொதுவான நிகழ்ச்சிகளாகத் தோன்றி விடுகின்றன. இதனால் அவர்களும் இத்தகைய செயல்களில் ஈடுபட்டு விடுகிறார்கள். இதன் விளைவாக, இளம் குற்றவாளிகளின் தொகையும் அங்கு அதிகரிக்கிறது.

எனவே இத்தகைய படங்களை எதிர்த்து அங்குத் தாளிகைகளில் கட்டுரைகள் வெளிவந்தன; பள்ளி ஆசிரியர் கழகங்கள், பெற்றோர் கழகங்கள் முதலியவை இத்தகைய படங்களை வன்மையாகக் கண்டிக்கின்றன. இதனைக் கண்டு, அமெரிக்காவில் உள்ள திரைப்படப் பிடிப்பாளர்கள் இப்போது கொலை, கொள்ளை, குத்து, வெட்டு முதலியன மலிந்த படங்களை உருவாக்குவதைக் குறைத்துக் கொண்டு, பாலியல் காட்சிகள் மலிந்த படங்களை உருவாக்கத் தொடங்கி விட்டனர்.

இத்தகைய பாலியல் படங்களை உருவாக்குவதில், அவர்கள் உரிய பருவமும் பக்குவமும் எய்தாத சிறுமிகளைக் கூடத் தமது படங்களில் அருவருப்பாகப் பயன்படுத்திக் கொள்ளத் தயங்குவதில்லை.

அமெரிக்கத் திரைப்பட உலகத்தின் நடுவமான ஆலிவுட், ‘சர்லி டெம்பிள்’ போன்ற பல அருமையான சிறுமி நடிகைகளை ஒரு காலத்தில் உருவாக்கித் தந்தது என்பது உண்மைதான். அவர்கள் எல்லாம் கண்ணியமான படங்களிலேயே நடித்துப் புகழ் பெற்றார்கள்.

ஆனால் இன்றோ நிலைமை மாறி விட்டது. பதினாறு அகவை கூட நிரம்பாத இளம் பாலிகைகளைத் திரைப்படப் பிடிப்பாளர்களும் இயக்குநர்களும் எப்படி எல்லாமோ பயன்படுத்திக் கொள்கிறார்கள். அந்தக் “குட்டி நடிகை”களை அவர்கள் ஆடைகளைக் களைந்து அம்மணமாகக் காட்சி தரச்செய்வது, அருவருப்பாகப் பேசச்செய்வது,

ஆடவர்களோடு இழிவான காமக் களியாட்டங்களிலும், காதல் விளையாட்டுகளிலும் ஈடுபடச்செய்வது, கைதேர்ந்த விலைமகளிராக நடந்து கொள்ளச்செய்வது, பல் பேரால் கற்பழிக்கப்பட வைப்பது ஆகிய காட்சிகளில் நடிக்க வைக்கிறார்கள். எடுத்துக்காட்டாக மார்செல் எமிங்வே என்னும் இளம் நடிகைக்கு 13 அகவை தான் ஆகிறது. எனினும் 'உதட்டுச்சாயம்' (Lipstick) என்ற படத்தில் இவள் மிகவும் அருவருப்பான காட்சியொன்றில் நடிக்க நேர்ந்தது. சோடிபாசுடர் என்னும் நடிகைக்கு அகவை பன்னிரண்டு தான். 'வாடகை வண்டியோட்டி' (Taxi Driver) படத்தின் இயக்குநர் இவளை ஓர் "இரவுக் கன்னியாக" "சந்து முனை விலைமகளாக" நடிக்க வைத்தார். புருக்கி சீல்டுசு என்பவளும் ஓர் இளம் நடிகை. இவ்ளையும் படமெடுப்பவர்களும், இயக்குநர்களும் தங்கள் படங்களில் மிகவும் அருவருப்புச் சுவையான முறைகளில் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இதனால் அவர்களுக்குக் கொள்ளை ஊதியம் கிட்டுகிறது. பாப் குசியோன் என்பவர் ஒரு தாளிகை வெளியீட்டாளர். இவர் புருக்கி சீல்டுசு என்னும் இந்த நடிகையைப் பற்றி என்ன சொல்கிறார் தெரியுமா? இவள் ஒரு குழந்தையின் உடம்பையும், ஒரு பெண்ணின் முகத்தையும் கொண்ட அரிய பிறவியாம். இவள் ஒரு "பாலியல் வெடி குண்டு" (Sex Bomb) போலவே தோற்றமளிக்கிறாளாம். அதனால்தான் புகைப் படக்காரர்களும், புதுமரபுக் கலைஞர்களும் இவளைப் பல கோணங்களில் படம் பிடித்துக் காட்டத் துடிக்கிறார்களாம். "புருக்கி சீல்டுசு" இந்த எழுபதாம் ஆண்டுகளின் பாலியல் அடையாளம் (Sex Symbol); அமெரிக்காவிலுள்ள நமக்கு இன்று தேவைப்படும் உருவம் அவள் தான். ஒப்பனைக் கலைஞர்கள் அவளைச் சில நிமைய நேரத்தில் 27 அகவைப் பெண்ணாகத் தோற்றமளிக்கச் செய்து விடுகிறார்கள். இதெல்லாம் திரைப்படத் தொழிலின் சட்ட திட்டங்கள். இந்தச் சட்ட திட்டத்துக்குக் கட்டுப்பட்டு நடக்கும் 'பெருமக்களாகவே' நாம் இருந்து வருகிறோம்" என்று எழுதுகிறார் அவர்!

இத்தகைய இளம் நடிகைகளைத் திரைப்படப் பிடிப்பாளர்களும் இயக்குநர்களும் இவ்வாறு பயன்படுத்துவதால், அந்த இளம் நடிகைகளின் வாழ்க்கை குட்டிச் சுவராக ஆவதோடு கூட, இவர்கள் பிடித்து வெளியிடும் படங்களைப் பார்க்கும் கோடிக்கணக்கான பிள்ளைகளின் வாழ்க்கையும் பல வழிகளில் அழிக்கப்படுகிறது.

ஆனால் வளரும் குமுகாயம் எக்கேடு கெட்டால் என்ன என்பதே அந்தப் படப்பிடிப்பாளர், இயக்குநர்கள் ஆகியோரின் போக்காக உள்ளது. அவர்களைப் பொறுத்த வரையில் தங்களின் பணப்பெட்டி நிரம்புகிறதா என்பதொன்றே கவலை. இதன் காரணமாக அவர்கள் நல்ல எதிர்காலத்தையும் உயர்ந்த பண்பைப் பெற்று நுகர வேண்டிய வளரும் தலைமுறையின் வாழ்வையும் குட்டிச் சுவராக்கத் தயங்க வில்லை.

o

# முத்தமிழில் தோன்றிய
# முன்னூற் பட்டியல்

—தொகுப்பு:. புலவர். நாவை-சிவம்.

| எண் | வகை | நூற்பெயர் | நூலாசிரியர்-பிற |
|---|---|---|---|
| 1. | இலக்கணம் | அகத்தியம் | அகத்தியர் |
| 2. | இலக்கண இலக்கியம் | தொல்காப்பியம் | தொல்காப்பியர் |
| 3. | நிகண்டு | திவாகரம் | சேந்தன் |
| 4. | அகரமுதலி | சதுரகராதி | வீரமாமுனிவர் |
| 5. | ஒப்பிலக்கணம் | திராவிட மொழிகளின் ஒப்பிலக்கிணம் | கால்டுவெல் |
| 6. | காப்பியம் | சிலப்பதிகாரம் | இளங்கோவடிகள் |
| 7. | கோவை | திருக்கோவையார் | மாணிக்கவாசகர் |
| 8. | உலா | ஞானஉலா | சேரமான் பெருமாள் நாயனார் |
| 9. | பிள்ளைத்தமிழ் (வைணவம்) | கண்ணன் பாடல் | பெரியாழ்வார் |
| | ,, | குலோத்துங்கன் | ஒட்டக்கூத்தர் |
| 10. | பரணி | கலிங்கத்துப்பரணி | செயங்கொண்டார் |
| 11. | பள்ளு | முக்கூடற்பள்ளு | என்னயினாப்புலவர் |
| 12. | கலம்பகம் (பிரபந்தம்) | நந்திக்கலம்பகம் | 3ஆம் நந்திவர்மன் தம்பி, குலமகன் |
| 13. | குறவஞ்சி | மீனாட்சியம்மை குறம் | குமரகுருபரர் |
| 14. | அந்தாதி (வைணவம்) | திருவாய்மொழி | நம்மாழ்வார் |
| 15. | சமய ஆற்றுப்படை | திருமுருகாற்றுப் படை | நக்கீரர் |
| 16. | சமண சமய புராணம் | பேருமந்திர புராணம் | வாமணாசாரி |
| 17. | புராணச்செய்தி இலக்கியம் | கலித்தொகை | தொகுப்பு: நல்லந்துவனார் |
| 18. | சமையற்செய்தி இலக்கியம் | சிறுபாணாற்றுப் படை | இடைக்கழி நாட்டு-நல்லூர் நத்தத்தனார் |
| 19. | சைவ சமய மெய்ம்மம் | திருமந்திரம் | திருமூலர் |

| | | | |
|---|---|---|---|
| 20. | சைவத் தொண்டர் வரலாறு | பெரியபுராணம் | சேக்கிழார் |
| 21. | சைவத் திருமுறை தொகுப்பு | பன்னிருதிருமுறை | நம்பியாண்டார் நம்பி |
| 22. | வைணவ பிரபந்தத் தொகுப்பு | நாலாயிர திவ்விய பிரபந்தம் | நாதமுனி |
| 23. | வைதிகப் பாவியம் | நைடதம் | அதிவீரராம பாண்டியன் |
| 24. | சமயக் கண்டனம் | மறுப்புக்குமறுப்பு | சூளை சோமசுந்தர நாயகர் |
| 25. | அளவை (தருக்க) நூல் | துகளறு போதம் | மறைமலையடிகளார் |
| 26. | கிறித்தவ மறை தமிழ் பெயர்ப்பு | விவிலியம் | ஆறுமுக நாவலர் |
| 27. | முகமதிய நூல் | திரியேசுத்துவ நிவாரணம் | முகைதீன்சரீபு சாயபு |
| 28. | வடமொழிக்கலப்பு | பாரதம் | வில்லிப்புத்தூரார் |
| | ,, | திருப்புகழ் | அருணகிரியார் |
| 29. | சமயப் பொது நோக்குப் பாடல் | திருவருட்பா | இராமலிங்கஅடிகள் |
| 30. | செய்யுள் இலக்கியத் திறனாய்வு (தொகுப்பு) | திருவள்ளுவமாலை | |
| | ,, | கம்பராமாயண ரசனை | வ. வே. சு. (ஐயர்) |
| 31. | உரைநூல் | தொல்காப்பியம் | இளம்பூரணர் |
| 32. | தமிழ் மரபு உரை | திருக்குறள் தமிழ் மரபுரை | ஞா. தேவநேயப் பாவாணர் |
| 33. | குறள் வெண்பா நூல் | திருக்குறள் | திருவள்ளுவர் |
| 34. | விருத்தப்பா-நூல் | சீவக சிந்தாமணி | திருத்தக்க தேவர் |
| 35. | வஞ்சிப்பா-நூல் | மகபுகுவஞ்சி | 'தென்மொழி' இதழாசான் பெருஞ்சித்திரனார் |
| 36. | செய்தி இதழ் | தமிழ்ப்பத்திரிகை | கிறித்தவ சமய வெளியீடு-(1831( |
| 37. | அச்சு நூல் | தம்பிரான்வணக்கம் | கொல்லம் கத்தோலிக்கர் |

| | | | |
|---|---|---|---|
| 38. | உரை நடை நூல் | வேதாந்ததத்துவம் | இராபர்டி-நோபிலி |
| 39. | சிறுகதை | மங்கையர்க் கரசியின் காதல் | வ. வே. சு. (ஐயர்) |
| 40. | புதினம் | பிரதாப முதலியார் சரித்திரம் | வேதநாயகம் (பிள்ளை) |
| 41. | நாடகம் | இராசராசவிசயம் | ——— |
| 42. | உரை நடை நாடகம் | பிரதாப சந்திர விலாசம் | இராமசாமி-ராசு |
| 43. | அச்சு நாடகம் | லீலாவதிசுலோசனு | பம்பல் சம்பந்த (முதலியார்) |
| 44. | குமுக நாடகம் | டம்பாச்சாரி விலாசம் | காசிவிசுவநாதர் |
| 45. | நாடகப் பாவியம் | மனோன்மணியம் | பேரா. சுந்தரம் (பிள்ளை) |
| 46. | மறுமலர்ச்சி-திரைப்பட உரை நடை | வேலைக்காரி | பேரறிஞர் அண்ணு |
| 47. | இலக்கிய நடை இதழ் | இந்தியா | சுப்பிரமணிய பாரதி |
| | ,, | தேசபக்தன் | திரு. வி. க. |
| 48. | தமிழ்-இன-நாட்டு வளர்ச்சி, புரட்சிப் பாடல் | பாரதிதாசன் பாடற்றெகுப்பு | பாரதிதாசனுர் |
| 49. | வாழ்க்கைவரலாறு | மீனுட்சிசுந்தரம் பிள்ளை | பர். உ. வே. சாமி நாதர் |
| 50. | இலக்கியச் சுவையில் தன் வரலாறு | நெஞ்சுக்கு நீதி | பர். கலைஞர் மு. கருணுநிதி |
| 51. | சுற்றுச்செலவு | என் இலங்கைச் செலவு | திரு. வி. க. |
| 52. | பழந்தமிழ் நூல் பதிப்பு | ——— | சி. வை. தாமோதரம் (பிள்ளை) |
| 53. | தமிழ் இலக்கிய வரலாறு | ——— | கா. சு. (பிள்ளை) |

## உலக வெற்றி!

திம் ராபின்சன் என்ற ஆங்கிலேயர், ஓர் உலக வெற்றியை நிகழ்த்தியுள்ளார். 15.2 நூறு மாத்திரி (சென்டி மீட்டர்) நீளமுள்ள 220 உருக்கு ஊசிகள் மீது 40 மணிநேரம் அவர் படுத்திருந்தார். இஃது ஓர் உலக வெற்றியாகும்.

# கழுதை கெட்டால் குட்டிச்சுவர்; குட்டிச் சுவர் கெட்டால்......?

—புலவர் வில்லவன். க.மு

"அட! சீ! தள்ளிப்போ!" தனது நண்பனாகிய குட்டிச்சுவர் இப்படிக் கூறியதைக்கேட்ட கழுதை வியப்படைந்தது.

"நண்பனே, என்மேல் திடுமெனச் சினங்கொள்ளும்படி நான் செய்த பிழைதான் என்ன?" என்று கேட்டது கழுதை.

என்றைக்குமில்லாமல் இன்றைக்குத் தன்மீது பட்டுச் சேலையொன்று காய்கிற பெருமிதத்தில் குட்டிச் சுவருக்குத் தலைக்கனம் ஏறியிருக்கிற செய்தி கழுதைக்குத் தெரியாதே!

"கழுதையே, என் மேல் பட்டுத்துணி விரிக்கப் பட்டிருக்கிறது! பார்த்தாயா! எனது தகுதி உயர்ந்து விட்டது! பொதி சுமக்கும் உனக்கு நான் இனி நண்பனாக இருக்க முடியாது." என்றது குட்டிச் சுவர்.

தனக்கேற்படும் உடல் அரிப்பை அவ்வப்போது போக்கிக் கொள்ளத்துணையாக இருந்துவந்த நண்பன் திடீரென இப்படி வெறுத் தொதுக்கியது கண்டு கழுதை மிகவும் வருந்தியது. ஒன்றும் கூறாமல் ஏதிலியாய்ச் சற்றுத் தொலைவிலிருந்த ஓர் அரச மரத்தடிக்குச் சென்று விட்டது.

திடுமெனக் காற்றடிக்கத் தொடங்கியது. வானம் கருத்தது. சிறு மழை தொடங்கிப் பெருமழை பிடித்தது.

அடித்த காற்றின் விசையில் குட்டிச்சுவர் மீதிருந்த பட்டுச்சேலை பறந்தது. கொட்டிய மழையில் குட்டிச்சுவர் கரையத் தொடங்கியது. கரைந்து செம்மண் நீராய் அரச மரத்தை நோக்கி ஓடியது.

அதுவரை அமைதியாயிருந்த கழுதை இப்படிக் கூறியது,

"நண்பனே, நீ என்னை வெறுத்தாலும் ஏனோ என் மனம் உன்னையே விரும்புகிறது. உனது தற்போதைய நிலைக்காக மிகவும் மனம் கவல்கின்றேன்" என்றது.

குட்டிச்சுவர் மன்னிப்புக் கேட்க அங்கு இருந்தால் தானே! அதுதான் கழுநீராய் ஓடுகிறதே!

---

## கலியாண குணன்!

கலிபோர்னியா நகர வாணரான கிளின் உல்ப் (அகவை 70) என்பவர், இப்போது ஒரு மணமகளைத் தேடிக் கொண்டிருக்கிறார். 1927 முதல் 22 தடவைகள் அவருக்குத் திருமணங்கள் நடைபெற்றுள்ளன. அவரது நீண்ட கால மண வாழ்வு, 5 ஆண்டுகள்; குறுகிய கால மணவாழ்வு 38 நாட்கள்.

## "சேக்சுபியர் மொழிகள்"

- கவலை வாழ்வின் பகைவன்!
- எண்ணம் விடுதலை உடையது!
- பேருண்டி பேரறிவை சிதைக்கும்!
- அறிவுடை முட்டாளாக இருக்கலாம், முட்டாள் அறிஞனாய் இருப்பதை விட!
- காத்துக் கிடத்தல் விரும்பாமையை விலக்குவதற்கே!
- நேர்மையில்லாதவனை அவனையே திருந்திக் கொள்ளும்படி கூறு; அவ்வாறு அவன் தன்னைத் திருத்திக் கொண்டால், மீண்டும் நேர்மையின்றி இருக்கமாட்டான்;
- முதுமை, நுண் அறிவைக் குறைத்து (சோம்பலை வளர்க்கும்) சிறந்த முட்டாளாய் ஆக்கிவிடுகிறது!

சி. நா. செந்தமிழ்ச்செல்வன்

---

## 'குழந்தைகள்'

- நாம் மட்டும் தலை வணங்கிக் கேட்போமானால் குழந்தைகளிடமிருந்து எத்தனையோ பாடங்களைப் பயின்று கொள்ளலாம். —காந்தியார்.
- குழந்தையும் மலரும் செழிப்புள்ளவை. அவற்றை மென்மையாகக் கையாளவேண்டும்; —நேரு.
- பல குழந்தைகள் பல கவலைகள்; ஒரு குழந்தையும் இல்லாவிட்டால் ஓர் இன்பமும் இல்லை, —பௌலி.
- இளம் அகவைப் பண்பாடுகள் கல்லில் கீறிய கோடுகள் போல் அழுத்தமாக உள்ளத்தில் பதிகின்றன. —காண்டேகர்.
- குழந்தைக்குப் பொருள் தேடி வைப்பதை விட நல்ல நல்ல பழக்கங்களைப் பயிற்றுவிப்பதே தந்தை தேடி வைக்கும் உண்மைச் செல்வமாகும். —வாட்லி.
- குழந்தைகளிடம் அளவுக்குமிஞ்சிய அன்பைக் கொட்டுவது தவறு. அன்பே சிறிதும் காட்டாமல் இருப்பது பெருந்தவறு. செல்லம் தொடர்ந்து காட்டப்பெறும் மகவு சின்னஞ்சிறு இன்னல் நேரிடினும் அதனைப் பெரிதாகக் கருதி அழும். வீண் ஆரவாரங்களினால் அன்பைப் பெறுதல் இயலாதென்ற உணர்ச்சியே குழந்தையைப் பண்படுத்தித் தன்னடக்கமுடைய மாந்தனாக்குகிறது. —பெர்ட்ரண்டு இரசல்.

தொகுப்பு: கோ. அழகினியன். க இ. கோட்டேரி.

---

## பைந்தமிழ் பாடு!

—பாவலர் - இடிமுரசு.

பாடு! பாடு! பாடு!
பைந்தமிழைப் பாடு!
ஓடு! ஓடு! ஓடு!
உடல் வலிக்க ஓடு!
ஆடு! ஆடு! ஆடு!
அன்பாய் விளையாடு!
சாடு! சாடு! சாடு!
தமிழ் எதிர்ப்பைச் சாடு!
கூடு! கூடு! கூடு!
குறைகள் போக்கக் கூடு!
நாடு! நாடு! நாடு!
நல்லோர் உறவை நாடு!

## தென்மொழி, தமிழ்ச்சிட்டு—பழைய படிகள் மிகக் கூடுதலான சலுகையில் விற்பனை!

### அன்பர்கள் உடனடியாக வாங்கிப் பயனடைக!

தென்மொழி அன்பர்களின் நலன் கருதியும், இடத்தட்டுப்பாட்டின் கரணியமாகத் தென்மொழி இருப்பைக் குறைக்க வேண்டியும் கீழ்க்காணும் **தென்மொழி, தமிழ்ச்சிட்டுப்** படிகள் மிகக் குறைந்த விலைக்கு விற்கப் பெறுகின்றன. அன்பர்கள் அவற்றை உடனடியாக வாங்கிப் பயன் பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தென்மொழி-பழைய படிகள் சுவடி 10 வரை தனிப்படி 25 காசு.
தமிழ்ச்சிட்டு-பழைய படிகள் குரல் 8 வரை தனிப்படி 10 காசு.

இருப்பிலுள்ள தேவையான மொத்தப் படிகளுக்குக் கணக்கிட்டு, அவற்றின் விலைத் தொகையுடன் அஞ்சல் செலவாகத் **தென்மொழி** 10 படிகளுக்கு 0-60 காசும், **தமிழ்ச்சிட்டு** 10 படிகளுக்கு 0-30 காசும் கூட்டிப் பணவிடை வழியாக **அமைச்சர், தென்மொழி, சென்னை-5.** என்னும் முகவரிக்கு விடுத்து வைக்கவும்.

**இருப்பிலுள்ள தென்மொழிப் படிகள் (சலுகை விலையில்):**

சுவடி—1, 2, 3-இருப்பில்லை.
சுவடி—4-இல் ஓலைகள் 3, 4, 5 மட்டுமே உள்ளன.
சுவடி—5-இல் ஓலைகள் 2, 3, 7, மட்டுமே உள்ளன.
சுவடி—6-இல் ஓலைகள் 1, 2, 7, 8, 9, 12 மட்டுமே உள்ளன.
சுவடி 7-இல் ஓலைகள் 1, 2, 3, 8, 10-11 மட்டுமே எள்ளன.
சுவடி—8-இல் ஓலைகள் 4, 7, 8-9, 10, 11-12 மட்டுமே உள்ளன.
சுவடி—9-இல் ஓலைகள் 1, 2, 3-4, 5, 8, 9-10, 11, 12உள்ளன.
சுவடி—10-இல் ஓலைகள் 1, 2-4, 5-6, 7-8, 11-12 மட்டுமே உள்ளன.

**முழுவிலை இதழ்கள்:**

சுவடி—11-இல் ஓலைகள் 1, 2, 3, 6-7, 10-11, 12. உள்ளன.
சுவடி—12-இல் ஓலைகள் 1 முதல் 12 முடிய 12 இதழ்கள் உள்ளன.
சுவடி—13-இல் ஓலைகள் 1, 2, 3, 4, 5-6, 7, 8-12 உள்ளன.
சுவடி—14-இல் ஓலைகள் 1, 2, 3, 4, 5-6, 7, 8-9, 10, 11, 12 உள்ளன.
சுவடி—15-இல் ஓலைகள் 1, 2, 3-4, 5, 6, 7, 8, 9, 10 உள்ளன.

**இருப்பிலுள்ள தமிழ்ச்சிட்டுப் படிகள் (சலுகை விலையில்)**

குரல்—1-இல், இசை 7, 8, 9, 11.
குரல் - 2-இல் இசை 1 முதல் 12 வரை 10 இதழ்கள். (4 இல்லை)
குரல்—3-இல் இசை 1 முதல் 10 வரை 8 இதழ்கள். (11.12 இல்லை)
குரல்—4-இல் இசை 1, 11 தவிர, 2 முதல் 12 வரை 8 இதழ்கள்
குரல்—5-இல் இசை 1 முதல் 12 வரை 9 இதழ்கள்.
குரல்—6-இல் இசை 1 முதல் 12 வரை 8 இதழ்கள்.
குரல்—7-இல் இசை 1 முதல் 12 வரை 6 இதழ்கள்.
குரல்—8-இல் இசை 1 முதல் 7 வரை 7 இதழ்கள்.

**முழுவிலை இதழ்கள்:**

குரல் – 9-இல் இசை 1 முதல் 12 வரை. 10 இதழ்கள்.
குரல்—10-இல் 1 முதல் 12 வரை 10 இதழ்கள்

தென்மொழி மின் அச்சகம், சென்னை–600 005 (தமிழகம்).